6. தகவல் கோரல்.

அ. ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள்.

திரு. பம்மல் நல்லதம்பி: பேரவைத் தலைவரவர்களே, விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரியம் குறித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது குறித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்தெல்லாம் அறையிலே வந்து விவரத்தைக் கேட்டறிந்து கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு ஒன்றுதான் எடுத்துக் கொள்வது என்று விதியிலே இருக்கின்றது. அதன்படி ஒரு நாளைக்கு ஒன்றுதான் எடுத்துக் கொள்ள முடியும்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அட்ஜர்ன்மென்ட் மோஷன் காலையிலே ஒரு மணி நேரத்திற்கு முன்பாகக் கொடுத்தாலே அதை ஏற்றுக் கொள்ளலாம். மிக முக்கியமான பிரச்சினையாக இது இருக்கிறது. அப்படி இருக்கும் போது நேற்றைக்கு கொடுக்கப்பட்டதை இன்னும் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப்படலாம் என்பது விதிமுறை. ஆனால் இன்றைக்கு ஏற்கெனவே ஒன்று எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது. ஆகவே ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு நாளாகத்தான் எடுத்துக் கொள்ள முடியும். மேலும் அவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வருகின்றபோது அமைச்சரவர்கள் அதற்குப் போதிய விளக்கங்களை அளிக்கின்ற வகையில் அவர்களும் தகவல்களைப் பெற வேண்டி இருக்கின்றது. ஆகவே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உடனடியாக எடுத்துக் கொள்வது என்பது பற்றியும் அவ்வப்போது எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்பது பற்றியும் முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவர் அவர்கள். குறிப்பிட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்த விவரங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு—அவர்கள் அவையிலே விளக்கம் அளிக்கத்தக்க வகையிலே—வந்து சேர்ந்திருக்கின்றதா என்றும் பார்க்க வேண்டி இருக்கின்றது. இவற்றை எல்லாம் கண்டறிந்துதான் மாண்புமிகு பேரவைத் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டி இருக்கின்றது. இதனை நாளை எடுத்துக் கொள்ளலாமா என்ற பிரச்சினை வருகின்றபோது போதிய விளக்கங்கள் வந்து சேர்ந்திருக்கின்றதா என்பதைக் கண்டறிந்து முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று ரேஷனைப் பற்றிய விவாதம் இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அரிசி கிடைப்பதில்லை என்ற பிரச்னையாதலால் அவசரமாக எடுத்துக் கொள்ளப் பெற்றது. 'பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும்' அல்லவா, அதனால் அதன் அவசியத்தை முன்னிட்டு எடுத்துக் கொள்ளப் பெற்றது. ஒவ்வொரு நாளாக ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்பெறும், அதனால் பொறுத்திருந்துதான் பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே அதேமாதிரி ஒன்றுக்கு மேலும் அவைத்தலைவர் விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறதே....

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுக்கு மேல் எடுத்துக் கொள்ளலாம் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம், அப்படி விதியில் இடம் இருக்கிறது.

திரு. என். வி.என்.சோமு : பேரவைத் தலைவர் அவர்களே, 90 லட்சம் பொருட்கள் ஏலத்தில் விடப்பட இருக்கின்றன, 5 பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஆகவே அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியாவது நீங்கள் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் பிரச்னை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வரப்போவது தொழிலாளர்கள் சம்பந்தமான மானியக் கோரிக்கைதான் ; அதனால் தொழிலாளர் மானியக் கோரிக்கையின்மீது பேசும் போது இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆ. நடவடிக்கை குறிப்பில் விடுபாடு

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ண அனுமதி கோருகிறேன். நேற்றைய தினம் எங்களுக்கு கொடுகக்ப் பெற்றிருக்கும் நடவடிக்கைக் குறிப்பில், 54வது– விதியின் கீழ் கொண்டு வரப்பட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பில் ''சென்னை கொருக்குப்பேட்டையில் 2-7-1980 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 300க்கும் மேற்பட்ட குடிசைகள் நாசமடைந்தது குறித்து என்பதின் கீழ் தீர்மானம் கொடுக்கப் பட்டவர்களின் பெயர்கள்ல் சில விடுபட்டிருக்கின்றன. அப்படிச் செய்வது முறையா எனி' ஏ'கட்கிறேன்.